25.07.2025 S.C.No.138 of 2017 P.W.53 – Chandrasekaran

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

(A1, A4 to A6 present. A2 and A3 absent and their absence condoned as u/s 317 Cr.P.C. petitions filed and allowed.)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 03.20 P.M.

**5 மற்றும் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கே: எந்த குற்ற எண்ணில் நான் புலன் விசாரணை செய்துள்ளேன் என்றால்?

ப: வேலூர் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை குற்ற எண் 5/2015 என்ற வழக்கில்.

கே: மேற்கண்ட குற்ற எண்ணிற்கு புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால்?

ப: தனியாக புகார்கள் பெறப்படவில்லை. மறுபதிவு செய்யப்பட்ட வழக்கு.

கே: உயர் அதிகாரிகள் இந்த வழக்கில் புலன் விசாரணை செய்ய சொன்னாரா அல்லது உயர்நீதிமன்ற உத்தரவின் பெயரில் புலன் விசாரணை செய்தேனா என்றால்?

ப: உயர் அதிகாரிகளின் உத்தரவின் பெயரில்.

கே: மறுபதிவு செய்யப்பட்ட வழக்கு எந்த குற்ற எண்ணிலிருந்து பதிவு செய்யப்பட்டது என்றால்?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015.

கே: குற்ற எண் 158/2015 வழக்கில் ஏற்கனவே விசாரணை செய்த அதிகாரி யார்?

ப: ஆய்வாளர் திரு.கோவிந்தசாமி.

கே: என்ன காரணத்திற்காக பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலிருந்து சிபிசிஐடிக்கு இந்த வழக்கு மாற்றம் செய்யப்பட்டது?

ப: ஷமீல் பாஷா என்பவரின் இறப்பு தொடர்பாக பிரச்சினையின் தீவிரம்/Sensitive கருதி இந்த வழக்கு மாற்றம் செய்யப்பட்டது.

கே: என்னிடம் வழக்கை மாற்றம் செய்தபோது குற்றவியல் நடைமுறை சட்டத்தின்படி எந்த வகையான வழக்கு என்று மாற்றம் செய்யப்பட்டது? Lock up death or Custodial death?

ப: Custodial death.

கே: Custodial death என்றால் என்ன ?

ப: போலீஸ் காவலில் இருந்து இறந்தாலோ அல்லது விடுவிக்கப்பட்டு பின்னர் இறந்தாலோ அதற்கு பெயர் Custodial death.

கே: ஷமீல் பாஷா என்பவர் காவல் நிலையத்தில் போலிஸ் காவலில் இருந்தபோது அடித்து கொல்லப்பட்டாரா?

ப: காவல் நிலையத்தில் அல்ல.

கே: இந்த வழக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு சம்பந்தப்பட்டது என்றால்?

ப: ஆமாம்.

கே: வழக்குக்கோப்பை என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால்?

ப: எனக்கு முந்தைய விசாரணை அதிகாரியான காவல் துணை கண்காணிப்பாளர் சென்றுள்ளார்.

கே: தாங்கள் அந்த காவல் நிலையத்தில் அதிகாரிகள் யாரையாவது விசாரித்தீர்களா?

ப: ஆய்வாளர் கோவிந்தசாமியை விசாரித்தேன்.

கே: ஆய்வாளர் கோவிந்தசாமி குற்ற எண் 158/2015 என்ற வழக்கின் விசாரணை அதிகாரி மட்டுமே என்றும் அவர் வேப்பங்குப்பம் காவல் நிலையத்தை சார்ந்தவர் என்றால்?

ப: சரிதான்.

கே: குற்ற எண் 158/2015 என்ற வழக்கில் கோவிந்தசாமி யார்யாரை விசாரித்தார் என்பதை தாங்கள் படித்து பார்த்தீர்களா?

ப: பார்த்தேன்.

கே: அவர் எந்தெந்த அதிகாரிகளை சாட்சிகளாக விசாரித்துள்ளார் என்றால்?

ப: மேற்படி பள்ளிக்கொண்டா காவல் நிலைய காவலர் அனுமந்தன் என்பவரை விசாரித்துள்ளார்.

கே: எஸ்எஸ்ஐ ரவி என்பவரை விசாரித்துள்ளாரா என்றால்?

ப: இல்லை.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் நான் மறுபதிவு செய்யப்பட்ட வழக்கின் விசாரணை அதிகாரிகளாக (SHO) யார் யார் இருந்தார்கள் என்று விசாரித்தேனா என்றால் ?

ப: நான் யாரையும் விசாரிக்கவில்லை. எனக்கு முந்தைய விசாரணை அதிகாரி எஸ்எஸ்ஐ ரவி, கலைச்செல்வன், சிங்காரம் ஆகியோர்களை ஆஜரிலிருந்த நிலைய பொறுப்பு அதிகாரிகளாக விசாரித்துள்ளார். காவல் நிலையத்தில் மார்டின் பிரேம்ராஜ்

என்பவர்தான் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பதவி காலியாக இருந்ததால் பொறுப்பு காவல் நிலைய அதிகாரியாக செயல்பட்டிருக்க வேண்டும்.

கே: மார்டின் பிரேம்ராஜ் என்பவர் பற்றிய தகவலை கூறியுள்ள தகவல் சம்பந்தமாக ஆவணங்களோ, சட்டவரைவோ ஏதாவது ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா?

ப: நிர்வாக அடிப்படையில் அவ்வாறு செயல்பட்டிருக்க வேண்டும். ஆவணங்கள் எதுவும் இல்லை.

கே: என்ன நிர்வாகத்தின் அடிப்படையில் அவர் நியமிக்கப்பட்டார் என்பதற்கான ஆவணம் எதையாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால்?

ப: இல்லை.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் எத்தனை பேர் வேலை செய்தார்கள் என்று தெரிந்துக்கொள்ள விரும்பினீர்களா என்றால்?

ப: தெரிந்துக்கொள்ள விரும்பி தெரிந்துக்கொள்ளப்பட்டது.

கே: யார் யார் வேலை செய்தார்கள், என்னென்ன பணி செய்தார்கள் என்றால்?

ப: அதற்கான பட்டியல் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த பட்டியலின் படி எஸ்எஸ்ஐ சிங்காரம், எஸ்எஸ்ஐ ரவி, எஸ்எஸ்ஐ ராஜேந்திரன், எஸ்எஸ்ஐ கலைச்செல்வன், தலைமை காவலர் அனுமந்தன், சிவானந்தம், முத்துக்குமார், பரத், Woman HC கங்காபாய், முதல் நிலை காவலர் சீனிவாசன், சசிகுமாரி, ராஜேஷ்

குமார், HC நந்தகுமார், காவலர் தமிழழகன், பெண் முநிகா தேவையாணி, YB சதீஷ் குமார், தீபக் குமார், ராஜேஷ் குமார், மணிகண்டன் ஆகியோர்.

கே: மேற்படி ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்?

ப: மாதிரி பணி பதிவேடு, பணி பதிவேடு, Nominal role ஆகியவைகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கே: என்னால் மேற்கண்ட ஆவணங்கள் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ?

ப: சரியல்ல.

கே: மேலே குறிப்பிட்ட நான் படித்து காண்பித்த காவல் அதிகாரிகளை நான் விசாரணை செய்தேனா என்றால்?

ப: நான் விசாரிக்கவில்லை.

கே: எனக்கு முன்பு விசாரணை செய்த காவல் ஆய்வாளர் கோவிந்தசாமி அவர்களால் குற்ற எண் 158/2015 வழக்கில் நான் மேலே சொன்ன காவல் அதிகாரகளை விசாரணை செய்துள்ளாரா?

ப: அனுமந்தன் என்பவரை மட்டும் விசாரித்துள்ளார்.

கே: குற்ற எண் 140/2015 என்ற வழக்கில் ஷமீல் பாஷா என்பவர் சம்பந்தமான தகவல்கள் இருக்கின்றன என்பது எனக்கு தெரியுமா என்றால்?

ப: ஆம்.

கே: குற்ற எண் 140/2015 என்ற வழக்கு சம்பந்தமாக நான் விசாரணை செய்தேனா என்றால்?

ப: இல்லை.

கே: குற்ற எண் 140/2015 சம்பந்தப்பட்ட வழக்குக்கோப்பு கோவிந்தசாமி காவல் ஆய்வாளர் விசாரணை செய்த குற்ற எண் 158/2015 வழக்குக்கோப்புடன் சேர்த்து என்னிடம் கொடுக்கப்பட்டதா என்றால் ?

ப: சேர்த்து கொடுக்கப்படவில்லை.

கே: குற்ற எண் 140/2015 வழக்கை விசாரணை செய்தவர் யார் என்று தெரியுமா என்றால்?

ப: தெரியும்.

கே: எஸ்எஸ்ஐ ரவி என்பவரால் விசாரணை செய்யப்பட்டது என்றால்?

ப: சரிதான்.

கே: அந்த குற்ற எண் 140/2015 வழக்குக்கோப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்?

ப: சரிதான்.

கே: அ.த.சா.ஆ.37 (வழக்கு நாட்குறிப்பு) ஆவணத்தில் இன்று 19.06.2015 ம் தேதி இவ்வழக்கு சம்பந்தமாக ஷமீல் பாஷா என்பவரை அவரது மாமா கௌஷ் பாஷா என்பவர் விசாரணைக்காக ஆஜர்படுத்தியவரை விசாரித்ததில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதில் அதற்கு கீழ் கலைச்செல்வன் என்பவர் கையொப்பமிட்டுள்ளார் என்றால்?

ப: அந்த வாசகம் உள்ளது உண்மை. அந்த கையொப்பம் கலைச்செல்வன் என்பவரினுடையது அல்ல. சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி என்பவரின் கையொப்பம்.

கே: காவல் ஆய்வாளர் கோவிந்தசாமி விசாரணையில் காவலர் அனுமந்தன் 16.06.2015 ம் தேதியும் 19.06.2015 ம் தேதியும் திரு.

ரவி சிறப்பு உதவி ஆய்வாளர் என்பவர் கைப்பட எழுதி அனுப்பி வைத்தார் என்று வாக்குமூலம் கொடுத்துள்ளாரா என்றால்?

ப: உள்ளது.

கே: குற்ற எண் 158/2015 சம்பந்தப்பட்ட வழக்குக்கோப்பினை தங்களிடம் கோவிந்தசாமி ஆய்வாளர் கொடுத்துள்ளாரா என்றால்?

ப: என்னிடம் கொடுக்கவில்லை. எனக்கு முந்தைய விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்துள்ளார்.

கே: நீதித்துறை நடுவர் எண் 5க்கு நீதித்துறை நடுவர் எண் 1 பொறுப்பில் இருந்போது காவல் ஆய்வாளர் கோவிந்தசாமி அவர்கள் குற்ற எண் 158/2015 கு.வி.மு.ச பிரிவு 176ன் கீழ் விசாரிக்கப்பட்ட வழக்குக்கோப்பினை அனுப்பி வைத்துள்ளார் என்றால்?

ப: அந்த வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை அனுப்பியுள்ளார்.

கே: பொதுவாக ஒருவர் புகார் கொடுத்தால் அதனை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் பிறகுதான் சாட்சிகளின் கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படும் என்றால்?

ப: சரிதான்.

கே: K.M.அலி அக்பர் என்பவர் 26.06.2015 அன்று காவல் ஆய்வாளர், நகர காவல் நிலையம், ஆம்பூர் அவர்களுக்கு மனு (எ.த.சா.ஆ.5) கொடுத்துள்ளார் என்றால்?

ப: சரிதான்.

கே: அதே K.M.அலி அக்பரிடம் 27.06.2015 அன்று கு.வி.மு.ச பிரிவு 161 ன் கீழ் வாக்குமூலம் (அ.த.சா.ஆ.82) பதிவு செய்துள்ளார் என்றால்?

ப: சரிதான்.

கே: மனுவிலும் சரி கு.வி.மு.ச பிரிவு 161 ன் கீழ் வாக்குமூலத்திலும் சரி 1 முதல் 7 எதிரிகளை பற்றி சொல்லப்படவில்லை என்றால்?

ப: 26.06.2015 தேதியிட்ட மனுவில் சொல்லப்படவில்லை. ஆனால் 27.06.2015 தேதியிட்ட வாக்குமூலத்தில் ஷமீல் பாஷா சாவிற்கு மார்டின் ஆய்வாளர் மற்றும் காவலர்கள்தான் காரணம் என்று சொல்லப்பட்டுள்ளது.

கே: அதே கு.வி.மு.ச பிரிவு 161 ன் கீழ் வாக்குமூலத்தில் இது சம்பந்தமாக நான் நடவடிக்கை எடுக்கச்சொல்லி ஆம்பூர் நகர காவல் நிலையத்திடம் வந்திருந்த பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் வேப்பங்குப்பம் காவல் ஆய்வாளராகிய தங்களிடம் புகார் கொடுத்தேன் அந்த புகார் கொடுத்த உடனே த.மு.மு.க கட்சியை சேர்ந்த ஆம்பூர் எம்எல்ஏ அஸ்லம் பாஷாவுடன் இருக்கும் த.மு.மு.க முக்கிய பொறுப்பில் உள்ள ஷமீல் அகமது என்பவர் யாருடைய பேச்சையோ கேட்டுக்கொண்டு சிறிய துண்டுச்சீட்டில் எழுதியிருந்த பெயர்களை சேர்த்து ஒரு கையில் பிடித்துக்கொண்டே அதில் என்னை கையெழுத்து போடச்சொல்லி என்னை கட்டாயப்படுத்தி கையெழுத்து போடவைத்தனர் அந்த மனுவையும் தங்களிடம் கொடுக்க வைத்தனர் என்று உள்ளதா என்றால்?

ப: உள்ளது.

கே: K.M.அலி அக்பர் அவர்கள் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள் நகர காவல் நிலையத்திற்கு 26.06.2015 அன்று கொடுத்த மனுவில் எதிரிகள் பெயர்கள் எதையும் குறிப்பிட்டு சொல்லபடவில்லை என்றால் ?

ப: சரிதான்.

கே: 26.06.2015 அன்று கொடுக்கப்பட்ட மனுவின் அடிப்படையில் விசாரணை செய்து பதிவு செய்யப்பட்ட கு.வி.மு.ச பிரிவு 161 ன் கீழ் வாக்குமூலத்தில் எதிரிகள் 2 முதல் 7 வரை பெயர்களை குறிப்பிடப்படவில்லை என்றால்?

ப: மேற்படி 26.06.2015 தேதியிட்ட மனுவானது ஆவணமாக நீதிமன்றத்தில் உள்ளது. அதன் மீது வாக்குமூலம் எதையும் பதிவு செய்யப்படவில்லை.

கே: நீதித்துறை நடுவருக்கு 26.06.2015 தேதியிட்ட மனுவுடன் அனுப்பப்பட்ட கோப்பில் கு.வி.மு.ச பிரிவு 161 ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால்?

ப: அந்த வாக்குமூலமானது குற்ற எண் 158/2015-ல் கொடுக்கப்பட்ட மனுவின் மீது பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம்.

கே: நீதித்துறை நடுவர் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட குற்ற எண் 158/2015 வழக்குக்கோப்பில் உள்ள 26.06.2015 மனு உள்ளதா இல்லையா என்றால்?

ப: உள்ளது.

கே: நீதிமன்றத்திற்கு குற்ற எண் 158/2015 என்ற வழக்குக்கோப்பு கொடுக்கப்பட்டபின் தேதியிடப்படாத புகார் மனுவானது K.M.அலி அக்பர் என்பவர் மூலம் காவல் துணை கண்காணிப்பாளர் நகர

காவல் நிலையம், ஆம்பூர் என்பவருக்கு கொடுக்கப்பட்டதாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அ.த.சா.ஆ.1 –26.06.2015 என்ற மனுவினை தொடர்ந்து கு.வி.மு.ச பிரிவு 161 ன் கீழ் வாக்குமூலம் எடுத்த பிறகு அந்த மனுவும் கு.வி.மு.ச பிரிவு 161 ன் கீழ் வாக்குமூலமும் நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்ட பிறகு தேதியிடப்படாத அ.த.சா.ஆ.1 அடிப்படையில் போடப்பட்ட முதல் தகவல் அறிக்கை குற்றவியல் நடைமுறை சட்டப்படி செல்லுபடியாகாது என்றால்?

ப: 26.06.2015 தேதியிட்ட மனுவானது மேற்படி ஆய்வாளரால் 01.07.2015 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. குற்ற எண் 158/2015 முதல் தகவல் அறிக்கையுடன் இணைக்கப்பட்ட புகார் மனுவின் பேரில் வழக்கானது ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.06 மணி**

M ELAVARASAN

Digitally signed by M ELAVARASAN
Date: 2025.07.25 17:10:52 +0530